RAILS
Refugee and Immigration Legal Service

# இன்னுமொரு TPV அல்லது SHEV க்கு விண்ணப்பித்தல்

**தொடர்பு விவரங்கள் மாறினால் DHA க்குச் சொல்லுங்கள். சட்ட ஆலோசனை பெறுங்கள். TPV / SHEV காலாவதியாகு முன்னர் விண்ணப்பம் செய்யுங்கள்**

## இன்னுமொரு SHEV / TPV க்கு விண்ணப்பிப்பது எப்பொழுது?

3 வருட தற்காலிகமான பாதுகாப்பு விசா (TPV) அல்லது 5 வருட பாதுகாப்புப் புகலிட முயற்சி விசா (SHEV) வைத்திருக்கும் நபர்கள் தங்களது தற்போதைய விசாக்கள் சட்டப்பூர்வமாக இருக்க அவை காலாவதியாகும் **முன்னர்** மேலும் TPV அல்லது SHEV க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விசா காலாவதியாவதற்குக் கிட்டத்தட்ட 3 மாதங்களுக்கு முன்பு உள்நாட்டலுவல்கள் திணைக்களம் (DHA) ஒரு நினைவூட்டுக் குறிப்பை விசா வைத்திருப்பவருடைய மின்னஞ்சல் அல்லது தொலைபேசிக்கு அனுப்பும். விசா வைத்திருப்பவர் தங்களுடைய தொடர்பு விவரங்கள் மாறினால் அதனை DHA க்குத் தெரிவிக்க வேண்டும் இல்லையென்றால் அவர்கள் நினைவூட்டலைப் பெறமாட்டார்கள்.

தற்போதைய TPV அல்லது SHEV காலாவதியாகும் முன்பு மேலும் விண்ணப்பம் செய்தால், ஒரு முடிவு எடுக்கும் வரை தற்போதைய விசாத் தொடரும். அனைத்து நன்மைகளும் வேலை / கல்வி கற்றல் உரிமைகளும் தொடரும். ஆனால் தற்போதைய விசா காலாவதியாகும் முன்பு புதிய படிவங்களை மெடிகெயர் (படிவம் எம் 004) மற்றும் சில வேளை Centrelink ஆகியவற்றிற்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

## எப்படி விண்ணப்பம் செய்வது

தகவல் சுதந்திரம் மூலம் **முதலில் உங்களுடைய DHA கோப்பைப் பெறவும்.** படிவம் 424A (இணைப்பு) இல் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலமாக நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் விசாவின் காலம் முடிவுக்கு வர முன் நீங்கள் கிட்டத்தட்ட 5 மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

நீங்கள் **இன்னுமொரு TPV அல்லது SHEV க்கு** அஞ்சல் வழியாக (அணுகல் படிவம் 1505 இங்கே) அல்லது இணையத்திலுள்ள ImmiAccount மூலம் விண்ணப்பிக்க முடியும்

உங்களுடைய DHA கோப்பிற்கு அணுகலைப் பெற்று மீண்டும் விண்ணப்பம் செய்ய **சட்டம் சார்ந்த உதவி பெற வேண்டியது** முக்கியமானது (கீழே உள்ள 'சட்டம் சார்ந்த உதவியைப்' பார்க்கவும்)

## இன்னுமொரு விண்ணப்பத்தை மதிப்பிடுதல்

பின்வரும் விடயங்களைக் கவனமாகத் தொடர்ந்து கவனிப்போம் என்று DHA சொல்கின்றது:

*சொந்த நாட்டில் நிலைமை மாறிவிட்டதா? *ஏதாவது குற்றம் சார்ந்த குற்றச்சாட்டுகள் அல்லது பாதுகாப்பு பிரச்சினைகள் இருந்ததா? *சொந்த நாட்டிற்கு வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளப்பட்டதா? *குடும்பக் குழுவில் மாற்றங்கள் உள்ளதா? *பாதுகாப்பைக் கோரியதற்கான காரணங்கள் மாறிவிட்டதா?

நாட்டின் நிலைமை மாறியிருந்தால் அல்லது நம்பகத்தன்மை அல்லது அடையாளம் பற்றி அறிய DHA மக்களை நேர்காணல் செய்யலாம்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், இன்னுமொரு TPV அல்லது SHEV அதே நிபந்தனைகளுடனும் நன்மைகளுடனும் வழங்கப்படும். DHA விண்ணப்பத்தை நிராகரித்தால், தகுதி மீள் பரிசீலனை கிடைக்கலாம்.

## சட்டம் சார்ந்த உதவி

**மீண்டும் விண்ணப்பம் செய்வதற்கு முன்னதாக DHA இலிருந்து உங்கள் கோப்பைப் பெறுதலும் சட்ட ம் சார்ந்த ஆலோசனை பெறுவதும்** மிகவும் முக்கியம்.

ரெயில்ஸ் நிறுவனத்தினால் (அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட சேவை - தொலைபேசி 3846 9300 www.rails.org.au/contact) ஒரு TPV அல்லது SHEV க்கு விண்ணப்பிப்பது தொடர்பான இலவச சட்டம் சார்ந்த உதவி அளிக்க முடியும்.

பிரிஸ்பேனில் வசிக்கும் மக்கள் 74 ஸ்டேஷன் ரோடு, Indooroopilly யில் அமைந்துள்ள Indooroopilly Uniting Church மருந்தகத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் சனிக்கிழமையும் மாலை 2 முதல் -5 மணி வரை DHA கோப்புகளுக்கான அணுகலைப் பெறுவதற்கான தகவல் சுதந்திரப் படிவங்களைப் பெற உதவி பெறலாம்

www.homeaffairs.gov.au/temporaryprotection என்னும் DHA யின்வலைத்தளத்தில் தகவல்கள் இருக்கின்றது

## TPV அல்லது SHEV க்கு இடையே நான் எப்படி முடிவு செய்வது?

முக்கிய வேறுபாடுகளாவன ஒரு TPV 3 ஆண்டுகளுக்கும் ஒரு SHEV 5 ஆண்டுகளுக்கும் செல்லுபடியாகும் மற்றும் SHEV வைத்திருப்பவர், அல்லது SHEV விண்ணப்பத்தில் ஒரு குடும்ப உறுப்பினராக இருந்து , ஒரு பிராந்திய பகுதியில் 3.5 ஆண்டுகள் வேலை அல்லது கல்வி கற்றலை நிறைவு செய்தால் , அவர்கள் சில திறமைகொண்ட, மாணவர் அல்லது குடும்ப விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும். (ரெயில்ஸின் SHEV தகவல் தாளைப் பார்க்கவும்).

எந்த விசாவுக்கு விண்ணப்பிப்பது என்பது உங்கள் முடிவாகும். நீங்கள் பின்வருவனபற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்:

- நீங்கள் அல்லது உங்கள் குடும்பதினர் ஒரு பிராந்திய பகுதியில் வேலை செய்ய அல்லது கல்வி கற்க முடியும்
- உங்கள் பாதுகாப்புக் கோரிக்கைகளை 3 அல்லது 5 ஆண்டுகளில் மீண்டும் மதிப்பிட வேண்டுமென பெரிதும் விரும்புகிறீர்கள்
- பிராந்தியப் பகுதியில் கல்வி கற்பதற்கு கட்டணத்தைச் செலுத்த உங்களால் முடியும்
- 5 ஆண்டுகளில் வேலை, மாணவர் அல்லது குடும்ப விசாக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்பு உங்களுக்கு இருக்கிறது
- உங்களுக்கு ஆதரவு சேவைகள் தேவை அத்துடன் அவை பிராந்தியப் பகுதியில் இருந்தால்.

## SHEV யும் TPV யும் எவ்வாறு வித்தியாசமானவை?

| | TPV | SHEV |
|---|---|---|
| எவ்வளவு காலம் விசா நீடித்திருக்கும் | 3ஆண்டுகள் வரை | 5ஆண்டுகள் வரை |
| TPV அல்லது SHEV - பாதுகாப்பு விசாவிற்கு மீண்டும் விண்ணப்பிக்கலாமா | ✓ | ✓ |
| வேறு சில (SHEV pathway) விசாக்களுக்கு விண்ணப்பிக்கலாமா | ✕ | ✓ |
| வேலை உரிமைகள், சென்டர்லிங்க், மெடிகேர், வேலை தேடுபவர் உதவி மற்றும் குறுகிய கால ஆலோசனை வழங்கல்முதலியவற்றை அணுக முடியுமா | ✓ | ✓ |
| குழந்தைகள்(18 வயதிற்குட்பட்ட) பாடசாலைக்குச் செல்லலாமா | ✓ | ✓ |
| 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வயது வந்தோர் புலம் பெயர்ந்த ஆங்கிலத் திட்டத்தை அணுகலாமா | ✓ | ✓ |

| | | |
|---|---|---|
| ஏனைய கல்விக்கான பொதுநல அரசின் நிதியுதவி வழங்கப்பட்ட மானியங்கள் | ✕ | ✕ |
| நீங்கள் குடும்ப உறுப்பினர்களை ஆஸ்திரேலியாவுக்கு கொண்டு வர முடியுமா? | ✕ | ✕ |
| நீங்கள் சொந்த நாட்டிற்குச் சென்று திரும்பலாமா**?** | ✕ | ✕ |
| மற்ற நாடுகளுக்குப் பயணிக்கவும் திரும்பவும் முடியமா? - நீங்கள் பயணம் செய்யும் **முன்பு** அமைச்சரிடம் எழுத்துப்பூர்வ அனுமதி பெற்றால் மட்டுமே | ✓ | ✓ |
| குடியுரிமை | ✕ | ✕ |
| 28 நாட்களுக்குள் முகவரி மாற்றத்தை DIBP க்கு அறிவிக்க வேண்டும் | ✓ | ✓ |

**சட்டம் சார்ந்த ஆலோசனை பெறவும். உங்களுடைய TPV / SHEV காலாவதியாகு முன்னதாகவே விண்ணப்பிக்கவும்**

அகதி மற்றும் குடிவரவு சட்டம் சார்ந்த சேவை www.rails.org.au இது சட்டம் சார்ந்த ஆலோசனை அல்ல. 04/2019 .